

பெரம்பலூர் மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட 12 வாகனங்களை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு, சார் ஆட்சியர் சு.கோகுல், என். கிருஷ்ணமூர்த்தி (ஆலத்தூர்), ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள் திருமதி மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), க.இராமலிங்கம் (வேப்பந்தட்டை), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), நகர்மன்றத் தலைவர் அம்பிகா இராஜேந்திரன், அனைத்து பேரூராட்சித் தலைவர்கள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை.பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில்

# தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தகவல்!

காஞ்சிபுரம், ஆக.15-

தமிழ்நாடு அரசால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் மூலம் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் மாதந்தோறும் இரண்டாவது அல்லது மூன்றாவது வெள்ளிக்கிழமை (அரசு விடுமுறை நாள் தவிர்த்து) அன்று சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும், ஆண்டிற்கு இரண்டு பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 16.08.2024 வெள்ளிக்கிழமை அன்று நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு 1000த்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கான நேர்முக தேர்வினை நடத்த உள்ளனர். அதுசமயம் பட்டதாரிகள், டிப்ளமோ, ஐ.டி.ஐ, 12வது மற்றும் 10ம் வகுப்பு படித்தவர்கள் போன்றவர்களை தேர்ந்தெடுக்க உள்ளனர். எனவே, 18 முதல் 35 வயது வரை உள்ளவர்கள் தங்களுடைய கல்வி சான்றிதழ்கள், பாஸ்போர்ட் அளவிலான புகைப்படத்துடன் 16.08.2024 அன்று காலை 09.30 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வந்து வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறும் மேலும் விவரங்களுக்கு 04427237124 என்ற எண்ணை தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசால் நடத்தப்படும்

# திருக்குறள் முற்றோதல் பாராட்டு பரிசுத் திட்டம்!

## அரியலூர் மாவட்ட மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்! மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!

அரியலூர், ஆக.15-

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் உள்ள கருத்துக்களைப் பள்ளி மாணவர்கள் இளம்வயதிலேயே அறிந்து கொண்டு, கல்வியறிவோடு நல்லொழுக்கம் மிக்கவர்களாக விளங்கும் வகையில் தமிழக அரசால் “திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுத்” திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

1330 குறட்பாக்களையும் மனனம் செய்து ஒப்பிக்கும் பள்ளி மாணவ / மாணவியர்களுக்குத் தலா ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ரொக்கப் பரிசாகத் தமிழ் வளர்ச்சித்துறையால் ஆண்டுதோறும் வழங்கப் பட்டு வருகின்றது.

2024-2025 ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் போட்டியில் பங்கேற்கும் பள்ளி மாணவர்கள் 1330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் திறன்கொண்ட மாணவர்களாக இருக்க வேண்டும். இயல் எண், அதிகாரம் எண், குறள் எண், போன்றவற்றை தெரிவித்தால் அதற்கான திருக்குறளை சொல்லும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும். திருக்குறளின் அடைமொழிகள், சிறப்புகள், சிறப்புப் பெயர்கள் போன்றவற்றையும் அறிந்திருக்க வேண்டும். திருக்குறளின் பொருளை அறிந்திருந்தால் கூடுதல் தகுதியாக கருதப்படும்.

அரியலூர் மாவட்டத்தில் 1330 குறட்பாக்களையும் மனனம் செய்து ஒப்பிக்கும் திறன் பெற்ற பள்ளி மாணவ - மாணவியர் இருப்பின் இப்போட்டியில் பங்கேற்கலாம். ஏற்கனவே இந்த போட்டியில் பரிசு பெற்றவர்கள் மீண்டும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளக் கூடாது.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் அரியலூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பம் பெறலாம் அல்லது தமிழ் வளர்ச்சித்துறையின் வலைதளத்திலோ (https://www.tamilvalarchithurai.tn.gov.in/) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொண்டு வருகின்ற 30.09.2024 அன்று மாலைக்குள் விண்ணப்பம் அளிக்க வேண்டும். இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு 04329228188 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர்பொ.இரத்தின சாமி, தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான

# விளையாட்டுப் போட்டிகள் செப்டம்பர் - அக்டோபரில் நடைபெறுகிறது!

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு!

நீலகிரி, ஆக.15-

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் 2024 ஆம் ஆண்டிற்கு வருகிற செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதம் 5 பிரிவுகளில் மாவட்டஃ மண்டல மற்றும் மாநில அளவில் நடைபெறுதல் குறித்து நீலகிரி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு வருமாறு :

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நீலகிரி மாவட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் கடந்த ஆண்டுமுதல்” தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை” விளையாட்டு போட்டிகள் தேசியஅளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அப்போட்டிகளுக்காக மொத்த பரிசுத் தொகை ரூ.25.00 கோடி உட்பட 59.89 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது.

இவ்வாண்டில் நடத்தப்பட இருக்கும் போட்டிகளில் வெவ்வேறு புதிய விளையாட்டுக்கள் சேர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர். மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என 5 பிரிவுகளில் 27 விளையாட்டுக்கள் 53 வகைகளில் மாவட்ட மண்டல மற்றும் மாநில அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் வரும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடத்தப்பட உள்ளது.

இது குறித்த செய்தியினை நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில் இப்போட்டிகளில் மாநில அளவில் தனி நபர் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும். குழுபோட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரமும். இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட உள்ளது. மற்றும் இவ்வாண்டு தனிநபர் மற்றும் குழு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு முதன் முறையாக நான்காம் இடம் பெற்றவருக்கும் மூன்றாம் பரிசிற்கு இணையாக பரிசு வழங்கிட உள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இவ்வாண்டுக்கான தனிநபர் மற்றும் குழு போட்டிகளுக்கான மொத்த பரிசுத் தொகை ரூ. 37 கோடியாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 12 வயதுமுதல் 19 வயது வரை உள்ள பள்ளி மாணாக்கர்களும். 17 வயது முதல் 25 வயது வரை கல்லூரி மாணாக்கர்களும், 15 வயது முதல் 35 வயதுவரை பொது பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட உள்ளது. போட்டிகளில் பங்கேற்க முன்பதிவு செய்திட கடைசி நாள் 25.08.2024 ஆகும்.

எனவே விளையாட்டில் ஆர்வம் உள்ள அனைவரும் தவறாமல் https://sdat.tn.gov.in என்ற இணைய தளம் மூலம் முன்பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.(குறிப்பு. இணையதளம் வாயிலாக மட்டுமே முன்பதிவு செய்திட வேண்டும். நேரில் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது) தாங்களாகவோ தங்கள் பள்ளி கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நீலகிரி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திருமதி. போ. இந்திரா அவர்களை 7401703491 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நாளை (16-08-2024-வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.



**பொருள் : முப்பெரும் விழா**

“அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள் : 12 -08- 2024.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

நாகை - தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில்

# யூரியா செறிவூட்டப்பட்ட வைக்கோல் தயாரிப்பு!

## மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்!

நாகை, ஆக.15-

நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் நாலுவேதபதி ஊராட்சியில் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் யூரியா செறிவூட்டப்பட்ட வைக்கோல் தயாரிப்பு அலகினை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் பார்வையிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் நாலுவேதபதி ஊராட்சியில் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் யூரியா செறிவூட்டப்பட்ட வைக்கோல் தயாரிப்பு அலகினை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் நேற்று முன்தினம் (13.8.2024) பார்வையிட்டார்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் நாகப்பட்டினம் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தினால் செயல்படுத்தப்படும் கிழக்கு காவேரி டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் உபபொருட்களை செறிவூட்டி கால்நடைகளின் உற்பத்தி திறனை பெருக்குதல் என்ற இரண்டு ஆண்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட யூரியா செறிவூட்டப்பட்ட வைக்கோல் தயாரிப்பு அலகினை பார்வையிட்டார். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் தலைஞாயிறு நெய்தல் ஜீவிதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் இயக்கும் கிராம அங்காடியில் விற்பனை செய்யப்படும் குழு உற்பத்தி பொருட்கள், மதிப்புக்கூட்டிய விவசாய பொருட்கள், கால்நடைத்தீவனம், நெய், மற்றும் வேர்கடலை போன்ற பொருட்களின் விற்பனை நிலவரம் பற்றி ஆய்வு செய்து கிராம அங்காடியின் விற்பனை அளவை அதிகப்படுத்த அறிவுறுத்தினார். மேலும் இத்திட்டத்தில் வழங்க இருக்கும் யூரியா மொலாசஸ் தீவனகட்டி பால்வளம் பெருக்க உதவும் என பண்ணையாளர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஐயப்பன், திட்ட பயனாளி திட்டத்தில் பயிற்சி பெற்று யூரியா செறிவூட்டப்பட்ட வைக்கோல் தயாரிப்பு அலகினை நிறுவியதோடு மட்டுமின்றி நவீன ஆடு வளர்ப்பு தொழில்நுட்பங்களை பின்பற்றி இலாபகரமான ஆடு வளர்ப்பு செய்வதை கூறினார்.

பயிற்சிபெற்ற இத்திட்ட பயனாளிகளுக்கு யூரியா செறிவூட்டப்பட்ட வைக்கோல் தயாரிப்புக்கான இடுபொருட்கள,; அசோலா விதை, கம்பு நேப்பியர் புல் கரணை, கால்நடை வளர்ப்பு புத்தகங்கள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

நாலுவேதபதி ஊராட்சி கிராம சேவை மையத்தில் துரித உணவு தயாரித்தல் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு பயற்சியாளர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு வங்கி கடன் வழங்குவது தொடர்பாக ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குநருடன் கலந்துரையாடினார். பின்னர் நாலுவேதபதி ஊராட்சியில் உள்ள மகளிர் சுயஉதவி குழு மூலம் நடத்தப்பட்டுவரும் நெகிழி மறுசுழற்சி மையத்தில் ஊராட்சிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை மறு சுழற்சி செய்யப்பட்டு சாலை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நாலுவேதபதி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நர்சரி கார்டனை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக நாகப்பட்டினம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில்; மூன்றாம் ஆண்டு புத்தக திருவிழா முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். பின்னர் நாகப்பட்டினம் சாமந்தான் பேட்டையில் உள்ள அன்னைசத்யா அரசு காப்பகத்தில் சமையலறை, குழந்தைகள் நலக் குழுமம், கூட்டறை, பள்ளிக்கூடம், கணினி அறை, விளையாட்டு பொருட்கள் அறை, நூலகம், தையல் பயிற்சி அறை ஆகியவற்றை பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் எஸ்.கே.கண்ணன் நாகப்பட்டினம் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர். சி.சுரேஷ், நாகப்பட்டினம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் துணை பொது மேலாளர் சு.விஸ்வந்த் கண்ணா, தலைஞாயிறு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜீ, சிங்காரவேலு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# டி.என்.பி.எஸ்.சி. தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.கே.பிரபாகர் நியமனம்!

சென்னை, ஆக.15-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் (டிஎன்பிஎஸ்சி) தலைவராக, வருவாய் நிர்வாக ஆணையராக உள்ள ஐஏஎஸ் அதிகாரி எஸ்.கே.பிரபாகர் நியமிக்கப்பட்டுள் ளார்.

தமிழக அரசின் பல்வேறு நிலைகளில் உள்ள அரசுப்பணிகளில் காலியாகும் பணியிடங்களுக்கு தகுதியானவர்களை தேர்வு செய்யும் முகமையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயம் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் காலியாகும் இடங்களுக்கு ஏற்ப, தேர்வுப் பட்டியலை முன்னரே வெளியிட்டு, அதன்படி டிஎன்பிஎஸ்சி தேர்வுகளை நடத்தி வருகிறது. டிஎன்பிஎஸ்சியை பொறுத்தவரை, ஒரு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்கள் அரசின் பரிந்துரைப்படி, ஆளுந ரால் நியமிக்கப் படுகின்றனர். தற்போதைய சூழலில் 9 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

முன்னதாக, தலைவராக இருந்த ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி பாலச்சந்திரன் கடந்த 2022ம் ஆண்டு பணி மூப்பால் ஓய்வு பெற்றார். இதையடுத்து, 2022ம் ஆண்டு ஜூன் 10ம் தேதி முதல், டிஎன்பிஎஸ்சி உறுப்பினர்களில் ஒருவரான ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி சி.முனியநாதன் பொறுப்பு தலைவராக உள்ளார்.

இந்நிலையில், டிஎன்பிஎஸ்சி தலைவராக தற்போது, வருவாய் நிர்வாக ஆணையராக உள்ள எஸ்.கே.பிரபாகரை நியமித்து தமிழக அரசு இன்று (ஆக.13) உத்தரவிட்டுள்ளது. இவர் பதவியேற்கும் நாளில் இருந்து 6 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை இப்பதவியில் இருப்பார் என்று தமிழக மனிதவள மேலாண்மைத்துறை வெளியிட்ட உத்தரவில் கூறப்பட்டுள்ளது. கடந்த 1966ம் ஆண்டு விருதுநகர் மாவட்டத்தில் பிறந்த எஸ்.கே.பிரபாகர், ஐஐடி டெல்லியில் எம்டெக் முடித்தவர். கடந்த 1989ம் ஆண்டு நேரடி ஐஏஎஸ் அதிகாரியாக தேர்வாகி, தமிழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வந்துள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது அவரது செயலாளர்களில் ஒருவராக பணியாற்றியவர் எஸ்.கே.பிரபாகர். தமிழக அரசில் தகவல் தொழில்நுட்பத் துறை, வணிகவரித் துறை, பொதுப் பணித் துறை உள்ளிட்ட துறைகளின் செயலராக பணியாற்றியுள்ளார்.

கடந்த 2019ம் ஆண்டு இவர் கூடுதல் தலைமைச் செயலர் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட் டார். கடந்த 2021ல் திமுக ஆட்சி பொறுப்பேற்ற நிலை யில், முதல்வர் மு.க. ஸ்டாலின், இவரை உள் துறைச் செயலராக நியமித் தார். அதன்பின், வருவாய் நிர்வாக ஆணையராக நியமிக்கப்பட்டார். ஓய்வு பெற இன்னும் 17 மாதங்கள் உள்ள நிலையில், தற்போது எஸ்.கே.பிரபாகர் டிஎன்பிஎஸ்சி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




உலக யானைகள் தினத்தை முன்னிட்டு அண்டை மாநிலமான கர்நாடகா மாநிலத்தில் உள்ள பெங்களூருவில் மனித யானை மோதல்கள் நிகழா வண்ணம், அதைக் கையாளுவது குறித்து சர்வதேச மாநாடு நடைபெற்றது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாநில முதல்வர்கள், துணை முதல்வர்கள், வனத்துறை அமைச்சர்கள், வருவாய்த்துறை அமைச்சர்கள், நிதித்துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் தமிழ்நாட்டின் சார்பாக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாநாட்டில் கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் மனித யானை மோதல்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், தமிழக வனத்துறையின் சார்பாக கையாளப்பட்டு வரும் வழிமுறைகள மற்றும் செயல்பாடுகள் குறித்தும், மனித மற்றும் யானைகள் அருகருகே இருக்கக் கூடிய பகுதிகளில் மனித–யானை மோதல்கள் நிகழாவண்ணம் ஒன்றுக்கொன்று இணக்கமாக வாழ்வதறகான சூழலை ஏற்படுத்துவது தொடர்பான முயற்சிகள குறித்தும் சிறப்பான முறையில் தனது கருத்துக்களை மாநாட்டில் எடுத்துரைத்தார்.